DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | SC Case No. 42/2017 |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | டாக்டர்.முத்துவேல் **PW - 18** |
| Father's Name | பாலகிருஷ்ணன் |
| Village | செஞ்சி |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 11/12/2020

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது செஞ்சி அரசு மருத்துவமனையில் மேல்சித்தாமூர் அரசு ஆரம்ப சுகாதார மருத்துவமனையில் பணிபுரிகிறேன். கடந்த 10.06.2016ம் தேதி செஞ்சி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது இரவு 07.30 மணிக்கு திரு.ராமன் வயது 75 த/பெ.அயோத்தியராமன், நெகனூர்புதுர், செஞ்சி வட்டம் என்பவர் அவர்களை தன்னை தெரிந்த நபர் 3 பேர்கள் கட்டை மற்றும் கத்தி, ஆகியவற்றால் தாக்கியதால் இரவு 06.30 மணிக்கு தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்ததில் தலையில் 6x2x1 செ.மீ. அளவுள்ள கிழிந்த காயம், இடது பக்கம் முகத்தில் வீக்க காயம் காணப்பட்டது. 2 கண்களிலும் வீக்கம் காணப்பட்டது. மேல்சிகிச்சைக்காக காயம்பட்ட நபரை அனுப்பி வைத்தேன். பின் 18.06.2016ம் தேதி ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்து காயம்பட்ட நபருக்கு இடது தோள் பட்டையில் எலும்பு முறிவு, இடது கை எல்.போவில் எலும்பு முறிவு, இடது கை ஃபோராம்பில் எலும்பு முறிவு, ஆகிய காயங்கள் இருந்தது என்றும் காயங்கள் கொடுங்காயங்கள் என்றும் நான் சான்று வழங்கினேன். திரு.ராமனுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று நான் 18.06.2016ம் தேதி வழங்கிய காயச்சான்று அ.த.சா.ஆ.5 ஆகும்.

கடந்த 10.06.2016ம் தேதி செஞ்சி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது இரவு 08.05 மணிக்கு திரு.சக்திவேல் த/பெ.ராமன் வயது 46, நெகனூர்புதுர், செஞ்சி வட்டம் என்பவர் அவர்களை தன்னை தெரிந்த நபர் 6 பேர்கள் தடி மற்றும் கத்தி, ஆகியவற்றால் தாக்கியதால் இரவு 06.30 மணிக்கு தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்ததில் தலையில் 4x3x2 செ.மீ. அளவுள்ள கிழிந்த காயம் காணப்பட்டது. மேல்சிகிச்சைக்காக காயம்பட்ட நபரை அனுப்பி வைத்தேன். பின் 18.06.2016ம் தேதி ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்து காயம்பட்ட நபருக்கு தலையில் 4x3x2 அளவு கிழிந்த காயமும், இடது மணிக்கட்டில் 3x2 காயங்கள் சொற்ப காயம் என்றும் நான் சான்று வழங்கினேன். திரு.சக்திவேல் த/பெ.ராமனுக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்ப காயங்கள் என நான் 18.06.2016ம் தேதி வழங்கிய காயச்சான்று அ.த.சா.ஆ.6 ஆகும்.

கடந்த 10.06.2016ம் தேதி செஞ்சி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது இரவு 08.20 மணிக்கு மாரியம்மாள் க/பெ.சக்திவேல் வயது 46, நெகனூர்புதுர், செஞ்சி வட்டம் என்பவர் அவர்களை தன்னை தெரிந்த நபர் 4 பேர்கள் தடி மற்றும் கத்தி, ஆகியவற்றால் தாக்கியதால் 10.06.2016ந் தேதி இரவு தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்ததில் காயம் பட்ட நபருக்கு 4x3x1 செ.மீ. இடது காலில் கிழிந்த காயம் காணப்பட்டது. மேல்சிகிச்சைக்காக காயம்பட்ட நபரை அனுப்பி வைத்தேன். பின் 18.06.2016ம் தேதி ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்து காயம்பட்ட நபருக்கு தலையில் 4x3x1 அளவு இடது காலில் கிழிந்த காயம், இருந்தது. மாரியம்மாள், க/பெ.சக்திவேல் ஏற்பட்ட காயங்கள் சொற்பகாயங்கள் என நான் 18.06.2016ம் தேதி வழங்கிய காயச்சான்று அ.த.சா.ஆ.7 ஆகும்.

கடந்த 10.06.2016ம் தேதி செஞ்சி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது இரவு 08.00 மணிக்கு சங்கரி த/பெ.சக்திவேல் வயது 18, நெகனூர்புதுர், செஞ்சி வட்டம் என்பவர் அவர்களை தன்னை தெரிந்த நபர் 3 பேர்கள் கட்டை மற்றும் கத்தி, ஆகியவற்றால் தாக்கியதால் 10.06.2016ந் தேதி சுமார் 06.30 மணிக்கு தாக்கியதாக

கூறினார். அவரை பரிசோதனை செய்ததில் நெற்றியில் ஆழ்ந்த கிழிந்த காயம் பட்ட நபருக்கு 3x2x1 செ.மீ. இருந்தது. மேல்சிகிச்சைக்காக காயம்பட்ட நபரை அனுப்பி வைத்தேன். சங்கரி, த/பெ.சக்திவேல் ஏற்பட்ட காயங்கள் சொற்பகாயம் என நான் 18.06.2016ம் தேதி வழங்கிய காயச்சான்று அ.த.சா.ஆ.8 ஆகும்.

கடந்த 10.06.2016ம் தேதி செஞ்சி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது இரவு 08.00 மணிக்கு குணசுந்தரி த/பெ.சக்திவேல் வயது 12, நெகனூர்புதுர், செஞ்சி வட்டம் என்பவர் அவர்களை தன்னை தெரிந்த நபர் 3 பேர்கள் கட்டை மற்றும் கத்தி, ஆகியவற்றால் தாக்கியதால் 10.06.2016ந் தேதி சுமார் 06.30 மணிக்கு தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்ததில் தலையில் இரத்த கட்டு இருந்தது. மேல்சிகிச்சைக்காக காயம்பட்ட நபரை அனுப்பி வைத்தேன். குணசுந்தரி, த/பெ.சக்திவேல் ஏற்பட்ட காயங்கள் சொற்பகாயம் என நான் 18.06.2016ம் தேதி வழங்கிய காயச்சான்று அ.த.சா.ஆ.9 ஆகும்.

கடந்த 10.06.2016ம் தேதி செஞ்சி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது இரவு 08.10 மணிக்கு கலைமணி த/பெ.சக்திவேல் வயது 16, நெகனூர்புதுர், செஞ்சி வட்டம் என்பவர் அவர்களை தன்னை தெரிந்த நபர் 5 பேர்கள் கத்தி, தடி, மற்றும் மிளகாய்பொடி, ஆகியவற்றால் தாக்கியதால் 10.06.2016ந் தேதி சுமார் 06.30 மணிக்கு தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்ததில் தலையில் 3x2x1 செ.மீ. கிழிந்த காயம், வலது தோள்பட்டையில் வலி இருந்ததாக கூறினார். மேல்சிகிச்சைக்காக காயம்பட்ட நபரை அனுப்பி வைத்தேன். கலைமணி, த/பெ.சக்திவேல் ஏற்பட்ட காயங்கள் சொற்ப காயங்கள் என நான் 18.06.2016ம் தேதி வழங்கிய காயச்சான்று அ.த.சா.ஆ.10 ஆகும். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

ராமன், குணசுந்தரி, சங்கரி ஆகிய காயம்பட்ட நபர்கள் தன்னை தெரிந்த 3 நபர்கள் தாக்கியதாக கூறியுள்ளார்கள் என்றால், சரிதான். சக்திவேலை 6 நபர்கள் தாக்கியதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். மாரியம்மாளை 6 நபர்கள் தாக்கியதாக கூறியுள்ளார்

என்றால் சரிதான். கலைமணியை 6 நபர்கள் தாக்கியதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். வெடிவைத்து தகர்க்கும்போது கூர்மையான கருங்கல் தலையில் விழுவதால் கிழிந்த காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் வாய்ப்பு உண்டு. சிராய்ப்பு காயங்கள் கரடுமுரடான இடத்தில் விழுவதால் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். வீக்க காயம் வீட்டிலுள்ள வழுவழுப்பான பைப் போன்றவற்றில் மோதினால் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். காயம் பட்ட அனைவரையும் நான்மேல்சிகிச்சைக்கு பரிந்துரை செய்து விட்டேன். யாரும் உள்நோயாளியாக சிகிச்சை தொடரவில்லை. காயம் பட்ட நபர்கள் மறுபடியும் செஞ்சி மருத்துவமனைக்கு வரவில்லை. மேல்சிகிக்சைக்கு எந்த மருத்துவமனைக்கு சென்றார்கள் என்று என்னிடம் உள்ள ஆவணங்களில் இல்லை என்றால், விழுப்புரம் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சக்திவேல், மாரியம்மாள், கலைமணி ஆகியோர் சென்றுள்ளார்கள். ராமன் மேல்சிகிச்சைக்கு சென்றாரா என்று எனக்கு தெரியவில்லை. காயத்தின் வடிவம் காயச்சான்றிதழில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். என்னிடம் ஆயுதத்தை காட்டி கருத்துரை எதுவும் பெறவில்லை என்றால் சரிதான்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | SC Case No. 42/2017 |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | பார்வதி **PW - 19** |
| Father's Name | வெங்கடேசன் |
| Village | பெரியகொழப்பலூர் |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 11/12/2020

<u>முதல் விசாரணை</u>

நான் தற்சமயம் செஞ்சி மகளிர் காவல் நிலையத்தில் முதல்நிலை பெண் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.06.2016ம் தேதி வளத்தி காவல் நிலையத்தில் 2ம் நிலை காவலராக பணியில் இருந்தபோது வளத்தில் காவல் நிலைய குற்ற எண்.156/16 சட்டப்பிரிவுகள் 147, 148, 448, 294(பி) ,323, 324, 307, @ 302 வழக்கில் இறந்துபோன ராமன் த/பெ.அயோத்தி கவுண்டர் நெகனூர்புதுர், என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய ஆய்வாளர் உத்தரவின்படி பாண்டி ஜிப்மர் மருத்துவமனைக்கு சேர்த்தேன். பகல் 12.00 மணி முதல் 14.00 மணி வரை பிரேத விசாரணைக்கு உடனிருந்தேன். பிரேதத்தை அடையாளம் காட்டி பிரேத பரிசோதனைக்கு பின் பரிதத்தை உறவினர்களிடம் நல்லடக்கம் செய்ய ஒப்படைத்தேன். பிரேத பரிசோதனையின்போது சேகரிக்கப்பட்ட உடல் உள்றுப்புகளை ஆய்வு செய்ய வேண்டி கொடுக்கப்பட்ட சீல் இட்ட கடிதத்தை உள்றுப்புகள் அடங்கிய பாட்டிலுடன் விழுப்புரம் வாட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். ஒப்புதல் பெற்று நிலையம் வந்த அறிக்கை செய்தேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

பிரேதத்தை உறவினரிடம் ஒப்படைத்தோம். உறவினரின் உறவுமுறையை குறிப்பிட்டு சொல்லதெரியவில்லை. பிரேதத்தில் இருந்து எடுத்து துணி எதுவும் என்னிடம் ஒப்படைக்கவில்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | SC Case No. 42/2017 |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | செந்தில் **PW - 20** |
| Father's Name | பஞ்சாட்சரம் |
| Village | நெகனூர் |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 11/12/2020

முதல் விசாரணை

நான் திருமலை பால் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 முதல் அ.சா.5 வரையானவர்களையும் ராமன் என்பவரையும் எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளையும் எனக்கு தெரியும். அடித்துகொண்டார்கள் என்று சொன்னார்கள், யார் யார் அடித்து கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. யார் யாருக்கு என்ன நடந்தது என்றும், என்ன காயம் பட்டது என்றும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(இந்நிலையில் இந்தசாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமென அரசு துறை வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.)**

கடந்த 2015ம் ஆண்டில் சீட்டு பணம் விரோதம் சம்பந்தமாக சக்திவேல் ஆஜர் எதிரிகளுக்கும் முன்விரோதம் இருந்ததாகவும், குப்பன் என்பவர் சீட்டு பணம்

கட்டாததால் கடந்த 09.06.2016ம் தேதி மாலை ஊர் பஞ்சாயத்து தாரர்கள் ராமனிடம் சீட்டு பணம் கேட்டார்கள் என்றும், சீட்டு பணம் கட்டாததால் குப்பனுக்கும் ராமனுக்கு நிறைய வாய் தகராறு ஏற்பட்டதில் ஒருவரை ஒருவர் திட்டி கொண்டார்கள் என்றால் சரியல்ல. சக்திவேல் ராமனை சமாதானம் செய்து வைத்தார் என்றும், 10.06.2016ம் தேதி மாலை 05.00 மணியளவில் நானும், பெருமாள், பெருமாள் மகன் சகாதேவன், கண்ணன் மகன் ருத்தரகுமார் ஆகியோர் எங்கள் ஊர் கூத்துமேடை அருகே உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது குப்பன், குப்பன் மனைவி கஸ்தூரி, குப்பன் மகன் ஞானமூர்த்தி, ஞானமூர்த்தி மகன் மலர்விழி, மருமகன் முருகன் ஆகியோர்கள் சக்திவேல் வீட்டை முன்பு சென்றார்கள் என்றும், முருகன் கையில் கத்தியும், குப்பன் தடியும், வைத்திருந்தார்கள் என்றும், கூத்து மேடை அருகே இவர்களுக்குள் அடிக்கடி வாய்தகராறும், ஒருவரை ஒருவர் தாக்கி கொள்வதும், நாங்கள் அதனை பொருட்படுத்தவில்லை என்றும், குப்பன் குடும்பத்தினர் சக்திவேல் வீட்டிற்கு சென்றவுடன் சிறிது நேரத்தில் சத்தமும், அழுகை சத்தமும், அலறல் சத்தமும், கேட்டது என்றும், நாங்கள் பதறியப்படி சக்திவேல் வீட்டிற்கு சென்று பார்த்தபோது ராமன், சக்திவேல், சங்கரி, கலைமணி, குணசுந்தரி ஆகியோர் ரத்த வெள்ளத்திலும், மாரியம்மாள் பலத்த அடிப்பட்டு மயக்க நிலையில் கிடந்தார் என்றும், வீடு முழுவதும் ரத்தம் சிதறி கிடந்ததும் என்றும் நாங்கள் வருவதை கண்ட குப்பன் தரப்பினர் அங்கிருந்து வேகமாக சென்று விட்டார் என்றும், காயம்பட்ட அனைவரையும் 108 ஆம்புலன்சு மூலம் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்றால் சரியல்ல. மேற்கண்டவாறு போலிசார் விசாரணையில் சொல்லி விட்டு தற்சமயம் எதிரியுடன் சமாதானம் ஆகி எதிரிகளை காப்பாற்ற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரணை செய்தார் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை</u>

இறந்துபோன ராமனுக்கு 2 மகன்கள. 1ம் எதிரி அவரின் ஒருமகன் சாட்சி சக்திவேல் என்றால் சரிதான். எதிரிகள் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள். சாட்சி சக்திவேல் மற்றும் அ.சா.1 முதல் 5 வரையானர்கள் ஒரே குடும்பத்தினர் என்றால் சரிதான்.